30th April 1959]

Sri K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, ஜாதி வித்தியாசங்கள் இப்பொழுது இருக்கும் நிலையிலே பொருளாதார அடிப்படையில் சர்க்கார் கொடுக்கும் கல்விச் சலுகைகளைக் கொண்டு ஜாதி வேறுபாடுகளை நீக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

Mr. SPEAKER : ஒன்றுமே கேட்கவில்லையே. கனம் அமைச்சருக்கு கேட்டிருந்தால் பதிலளிக்கலாம்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது கல்விச் சலுகை வேண்டுமென்றால், ஜாதி அடிப்படையிலே கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. ஆகையால், குழந்தைகளாக இருக்கும் காலத்திலேயே ஜாதி அடிப்படையிலே நிலைத்து வளரக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்பதுதான் சர்க்காருடைய கொள்கை.

Girls' Education

* 273 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN (on behalf of Sri N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken by Government for expansion of girls' education in the State?

The Hon. Sri C. SUBRAMANIAM : Under the Second Five-Year Plan for the development of Education in the State, there are two schemes for additional enrolment of children in schools, one of children of the age group 6–14 and another of children of the age group 14–17. These schemes cover additional enrolment of girls also. The Government have also recently sanctioned, with the assistance offered under the Central Scheme for expansion of Girls' Education and Training of Women Teachers, the construction of 126 quarters (twin units) for women teachers working in District Board Elementary Schools in rural areas. Under another Central Scheme for relief of the educated unemployed, this Government have sanctioned the opening of schools in school-less centres and construction of 72 quarters for the women teachers in these schools.

Sri K. VINAYAKAM : Sir, in order to extend education amongst the girls, will the Government consider the possibility of giving free education to the girls at all stages from the Primary to the College stage?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not think it is necessary to give free education for all girls, for, girls belonging to richer sections can afford to pay the fee. The whole question is under consideration. The hon. Member may be aware that a Committee under the Chairmanship of Mrs. Durga Bai Deshmukh was appointed and it has submitted its report. When its recommendations are taken up for consideration, all these points will be covered.

[30th April 1959

Sri A. VEDARATHNAM : பெண் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு என்று ஆசிரியைகளுக்கு மட்டும் வீடு கட்டிக் கொடுக்கப்படு கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போதிய மாண வர்கள் இருந்தும் பள்ளிகளுக்குச் செல்வதற்கு மாணவிகள் வர வில்லை. அப்படி அவர்கள் பள்ளிகளுக்கு வருவதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ? அவர்கள் பள்ளிகளுக்கு வருவ தற்கு ஊக்கம் அளிக்கும் முறையில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா அரசாங்கத்தினிடம் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மதிய உணவு கொடுக்கப் படுவதன் மூலம் ஓரளவு அதிகப்படியாக மாணவிகள் பள்ளிகளுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அதிகப்படியான மாணவிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு நான் சொன்னதைப் போல தேஷ்முக் கமிட்டி சிபார்சை பரிசீலனை செய்து அதை அமுல் நடத்தும் போது பல திட்டங்களை நிறைவேற்ற வழி ஏற்படும் என்று நம்புகிறேன்.

Sri S. S. RAMASAMY PADAYACHI : பெண் கல்வியை அதிகமாக ஆக்குவதற்கு 1,200 ரூபாய்க்குக் குறைவான வருமானம் வருகிறவர்களுக்கு பெண் கல்விக்கு சலுகை அளிக்கும் முறையில் அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுதுதான் அதைப் பற்றிச் சொன்னேன்.

Indigenous Systems of Medicine

* 274 *Q.*—**Sri A. VEDARATHNAM :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இப்போது இந்திய மருத்துவக் கல்லூரியில் எத்தனை பேர் சித்த, ஆயுர்வேத, யூனானி முறைகள் ஒவ்வொன்றிலும் பயிற்சி பெற்று வருகிறார்கள் ?

(ஆ) இம்மூன்று முறையில் எந்த முறையில் பயின்றவர்களின் தேவை அதிகமாக இருக்கிறது ?

(இ) அத்தேவையைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Siddha—194.

Ayurveda—410.

Unani—68.

(*b*) Siddha and Ayurveda are equally popular in this State and there is a demand for persons trained in these two systems.

(*c*) For the last two years the number of students in Siddha has been increased. The research in Siddha has been given more beds.